## பாசிச சக்திகளிடம் இருந்து தமிழ்நாட்டைக் காப்பதே

# எஸ்.எஸ்.தென்னரசுக்கு நாம் காட்டும் உண்மையான நன்றி!

### சிவகங்கை மாவட்டம், கிருங்காக்கோட்டை சிலை திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சிவகங்கை,நவ. 17 -**

சிவகங்கை மாவட்டம், கிருங்காக்கோட்டையில் மாவட்டக் கழகத்தால் புதுப்பிக்கப்பட்ட, எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் வெண்கல சிலையை பொதுமக்களின் வாழ்த்து முழக்கத்துக்கு இடையே துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர், ``இங்கே இருக்கும் அடிமைக் கூட்டத்தை வீழ்த்தி, பாசிச சக்திகளிடம் இருந்து தமிழ்நாட்டை நாம் அனைவரும் சேர்ந்து பாதுகாக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் சேர்ந்து உழைப்பதுதான், அய்யா தென்னரசு அவர்களுக்கு நாம் காட்டும் உண்மையான நன்றியாக இருக்கும்” என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

‘சிறுகதை மன்னன் - சிறைப் பறவை’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்ட, ஆற்றல்மிகு செயல்வீரர், மறைந்த அய்யா எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் வெண்கலச் சிலையைத் திறந்துவைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



**அணையைக் கட்டியவர்**

1989-ஆம் ஆண்டு, திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக அய்யா தென்னரசு அவர்கள் இருந்தபோது, கிருங்காக்கோட்டை மக்களின் கோரிக்கையை ஏற்று, இங்கே ஒரு அணையைக் கட்டினார்கள். அதற்காக அவருக்கு நன்றி சொல்லும் வகையில், இந்தப் பகுதி மக்கள், அய்யா தென்னரசு அவர்களுக்கு மார்பளவு கற்சிலை ஒன்றை அமைத்து இருந்தீர்கள்.அந்தச் சிலைதான், இன்றைக்கு, நம்முடைய அமைச்சர்-மாவட்டக் கழகச் செயலாளர், அண்ணன் பெரியகருப்பன் அவர்களின் முயற்சியால், வெண்கலச் சிலையாகப் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறது.

முல்லைப் பெரியார் அணையைக் கட்டிய ஆங்கிலேயப் பொறியாளர் பென்னி குயிக் அவர்களை தேனி மற்றும் சுற்றுவட்டார மாவட்ட மக்கள் இன்னும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள். இந்த சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கிருங்காக்கோட்டை மக்கள், அய்யா தென்னரசு அவர்களின் பெருமைகளைப் போற்றுகிறீர்கள். ஆகவே, நமக்கு உதவி செய்பவர்களை எப்படிக் கொண்டாட வேண்டும் என்று சிவகங்கை மக்களாகிய உங்களைப் பார்த்துத்தான் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

**அரசியல் பயணம்**

1949-இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது, அய்யா தென்னரசு அவர்கள் திருக்கோட்டியூர் கிளைச் செயலாளராக அரசியல் பயணத்தைத் தொடங்கினார்கள். அதற்குப் பிறகு, படிப்படியாக உயர்ந்து, ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டத்தின் செயலாளராக, 15 ஆண்டுகள் சிறப்பாகக் கழகப் பணியாற்றி இருக்கிறார்கள். அவர் சட்டமன்ற மேலவை உறுப்பினராக, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினராகவெல்லாம் மக்கள் பணி ஆற்றியிருக்கிறார். இந்தப் பதவிகளை எல்லாம்விட, கழகம் நடத்திய அத்தனை போராட்டங்களிலும் கலந்துகொண்டு, மொத்தம் 26 முறை சிறைக்குச் சென்றதைத்தான் என்றைக்கும் அவர் பெருமையாகக் கருதினார்.

இதில், ஒரு வருட காலம், மிசா கைதியாகவும் சிறையில் கொடுமைகளை அனுபவித்தவர்தான், அய்யா தென்னரசு அவர்கள். சிறைக்குச் செல்வதிலேயே வெள்ளி விழா கொண்டாடக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டின் பல சிறைகளில் இருந்திருக்கிறார். தென்னரசு அவர்கள் வெறும் அரசியல்வாதி மட்டுமல்லாமல், அவர் ஒரு மிகச் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்தார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

கலைஞர் அவர்களுக்கு அரசியல் தோழனாக மட்டுமின்றி, இலக்கியத் தோழனாகவும், இருந்தவர் அய்யா தென்னரசு அவர்கள். தென்னரசு அவர்களின் உண்மையான பெயர் சிந்தாமணி. அவருடைய பெயரை தென்னரசு என்று மாற்றி வைத்தவர், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

தென் பகுதிக்கெல்லாம் ஒரு காலத்தில் அவர் அரசராக வருவார் என்கிற எண்ணத்தில்தான் கலைஞர் அவர்கள் அந்தப் பெயரை வைத்தார்களாம். கலைஞர் அவர்கள் நினைத்தது மாதிரியே, ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டத்தின் அரசர் போலவே வாழ்ந்தவர், இன்றைக்கு இங்கே சிலையாக இருக்கிற அய்யா தென்னரசு அவர்கள். அவர் மாவட்டச் செயலாளராக இருந்தபோது, இந்த மாவட்டத்தைக் கழகத்தின் கோட்டையாக மாற்றி, எல்லா தொகுதிகளிலும் நம்முடைய கழக அணியை வெற்றிபெறச் செய்து காட்டினார். அதே போல், வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் நம்முடைய கழக வேட்பாளர்கள் இந்த சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள எல்லா தொகுதிகளிலும் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இங்கே இருக்கும் அடிமைக் கூட்டத்தை வீழ்த்தி, பாசிச சக்திகளிடம் இருந்து தமிழ்நாட்டை நாம் அனைவரும் சேர்ந்து பாதுகாக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் சேர்ந்து உழைப்பதுதான், அய்யா தென்னரசு அவர்களுக்கு நாம் காட்டும் உண்மையான நன்றியாக இருக்கும்.

வருகிற 2026 -ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஏழாவது முறையாக நிச்சயமாக ஆட்சி அமைக்கும். நம்முடைய கழகத் தலைவர் அவர்களைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைப்போம் என்ற உறுதிமொழியை இங்கு ஏற்றுக்கொண்டு, அதற்கான களப்பணிகளை இப்போதே நாம் ஆரம்பிக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக்கொண்டு, அய்யா தென்னரசு அவர்களின் புகழ் ஓங்கட்டும், அவர் புகழ் என்றென்றும் நீடித்து நிலைக்கும் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றி னார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், தமிழரசி, முன்னாள் அமைச்சர் தென்னவன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கணேசன், சேங்கை மாறன், ஜோன்ஸ் ரூஸ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி. ராஜா, மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் பூர்ண சங்கீதா, இராமகிருஷ்ணன், சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் சகோதரர் எஸ்.எஸ்.அருணாசலம், மகள் இளவரசி, நவகோடி நாராயணன், செந்தாமரை, கார்த்திக், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வல்லபாய், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செந்தில், பூமணி, பாலசுப்பிரமணியன், கதிர்வேல், கழகச் செய்தித் தொடர்பு குழுத் துணைத் தலைவர் மருது அழகுராஜ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் நடைபெற்ற அரசு விழாவில் 17.86 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 23 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ். இரகுபதி, கேஆர். பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் த.சேங்கை மாறன், சிங்கம்புணரி பேரூராட்சித் தலைவர் ந.அம்பலமுத்து, துணைத் தலைவர் பி.செந்தில்குமார் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

---

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! சிங்கம்புணரியில்

# முன்னாள் அமைச்சர் செ.மாதவன் மணிமண்டபம் - சிலை திறப்பு விழா!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சிவகங்கை. நவ. 17 -

சிவகங்கை மாவட்டம் சிங்கம் புணரியை சேர்ந்தவர் செ.. மாதவன். இவர் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் அமைச்சராக பணியாற்றியவர் . இவரது சொந்த ஊரான சிங்கம்புணரியில் பாரிவள்ளல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியை துவக்கினார் . அந்தப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செ. மாதவனின் மணிமண்டபம்,செ.மாதவன் மார்பளவு சிலை ஆகியவற்றை செ. மாதவன் மகள் வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம் மகன் அருளாளன் ஏற்பாட்டின் பேரில் நிறுவப்பட்டுள்ளது. அத்தகைய மணிமண்டபம் மற்றும் செ. மாதவன் சிலையினை நேற்று முன்தினம்15ம்தேதி மாலை கூட்டுறவுத் துறை அமைச்சர் ,சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

முன்னதாக நிகழ்ச்சிக்கு வருகை தந்த துணை முதலமைச்சரை பள்ளியின் தாளாளர் செ. மாதவன் மகள் திருமதி வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம்,மகன் அருளாளன் ஆகியோர் வரவேற்றார்கள் .

இந்த நிகழ்ச்சியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அமைச்சர்கள் எஸ் ரகுபதி, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா எம்.எல்.ஏ.பள்ளியின் செயலாளர் அருளாளன், பள்ளி முதல்வர் ஷ்யாம் பிராங்கிளின் டேவிட் ,மேலாளர்கள் கிருஷ்ணன், சரவணன், ஒன்றிய செயலாளர்கள் பூமிநாதன், கே.பாலசுப்பிரமணியன், பி. செல்வராஜ், பேரூர் கழக செயலாளர் தீ.கதிர்வேல், பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, துணைத்தலைவர் இந்தியன் செந்தில், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த. சேங்கை மாறன் ,திருமதி ஜோன்ஸ்ருசோ, ஒன்றிய துணைச் செயலாளர் சிவபுரி சேகர் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கலந்து கொண்டார்கள்.




வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேலூர் மாநகராட்சி உட்பட்ட தொரப்பாடி பகுதி அரியூர் பகுதியில் SIR குறித்த சிறப்பு தீவிர வாக்காளர்கள் திருத்தல் பணி நடைபெற்று வருகிறது. அதை மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் பகுதி செயலாளர் ஆர்.கே.ஐயப்பன் அவைத் தலைவர் ரவி தேர்தல் பொறுப்பாளர்கள் வட்டக் கழக செயலாளர்கள் BLA 2 பூத்து முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

---

# அம்பாசமுத்திரம் தொகுதியில் S.I.R. பணிகள் ஆய்வு!

### மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் மேற்கொண்டார்!

நெல்லை. நவ. 17 -

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் நேற்று முன்தினம் (15.11.2025) அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் (SIR) பணியினை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அம்பாசமுத்திரம், ஆலங்குளம் தொகுதியில் எஸ்.ஐ.ஆர்.பணியில் முழு கவனம் செலுத்தி தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். அதன்படி நேற்று முன்தினம் (15 ஆம் தேதி) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள வாக்கு சாவடி மையங்களில் ஆய்வுப் பணி மேற்கொண்டார்.

அப்போது பணியில் ஈடுபட்டிருந்த வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA 2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆகியோர்களிடம் (SIR) குறித்து கவனமுடன் செயல்பட வேண்டிய உரிய அறிவுரைகளை வழங்கினார்.தொடர்ந்து வாக்குச்சாவடியில் உள்ள உதவி மையங்களின் அலுவலர்களிடம் (SIR) குறித்த பணி விவரங்களை கேட்டறிந்து, பொதுமக்களுக்கு உதவிட வேண்டுகோள் விடுத்து கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,மாவட்ட துணை செயலாளர் மைக்கேல், அம்பை ஒன்றிய செயலாளர் பரணி ஆர்.சேகர்,நகர செயலாளர்கள் கணேசன்,கே.கே.சி.பிரபாகர பாண்டியன்,மாவட்ட அணி நிர்வாகிகள் சு.க.நெடுஞ்செழியன் அருண் தவசு பாண்டியன், முருகையா பாண்டியன், சரவணன், சிவந்திபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பி.ஜெகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்ட 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு 2757பயனாளிகளுக்கு ரூ.20.69கோடி மதிப்பிலான கடன் உதவிகளை மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, தெற்கு வடக்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் துணை மேயர் எம் சுனில் குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.